தேனினு மின்பமார் தேவர் சேவைக்காய்க், கானலூர் கொயிலுட் கடந்தபோதிலென், வீனமின் மகன்பிணி யெகிற் றென்னவே, தானவி விரைந்திவண் சார்ந்த னென்றனர். (௱௰)

இவையெலா மப்துல்லா வியம்ப வம்றவுஞ், சுபையிறாங் கேட்டருஞ் சுகிகொண்டார்பின, ரவண்விடுத் தகன்றன ரருளின் மூவருஞ், செலவெடும் றவுசுல்கூல் செய்கை யோதுவாம். ()

---

* இச்சிலை யென்றது அவரிடமிருக்கும் பற்றுகைச் சுட்டியது

ஆவதை யமைத்திடா னமைச்சர் சொல்லெலும், பாவதையுன்
டும்பற் றுசு போமெனை, மேவதை நோகத் திடித்த தாலிரு,
கோவதை மூடிடாக் கொள்கை யாகியே. (௱௰௨)

தேவதை யாரெனுந் திருடினார்கொலோ, சாவதை விரித்திடத்
தரியலாரிடந், திவரித் துற்றதோ செய்கை யாதவை, வேய்விடுத்
தறித்திட வேண்டுமென் றெண்ணினான். (௱௰௩)

எண்ணியங் குறுகையி லினனுற் றுணக்காற், றிண்ணிய மறத்
தினிற் றிறத்திற் போரினின், மண்ணினி லெவர்களு முவமை
மன்னிடாத், திண்ணிய வொருவனைச் சாரக் கூவினான். (௱௰௪)

அவன்கினைத்திடுவன் னசுமத்தென்றுமா, நவைகொளுங்
காரண நாமந் தன்னையே, மவுல்லோ பிறுறத்துல் மவுத்தும்வெ
ன்றுமாம், பவமுறும் நவுசல்கூல் பாலில் வந்தனன். (௱௰௫)

வருந்திற லவனொடு மரவங் காயிரம், பொருந்திட வெடுத்தநீ
பொருப்புத் தோறும்போய்ப், பரிந்திடப் பார்த்துப்பண்
டிதனைப் பற்றியே, வருந்திடக் கொணர்கென வழுத்தினரோ.

அரசுளாப் படியவ் வாயிரம் பெயர், விரைவினி லணிகலன்
மிக்கி வாசிமேல், வரவல கத்துகள் வானமோதவத், தரியலரோர்
டுமே தேடிச் சார்ந்தனன். (௱௰௭)

தவத்தினைத் தலையினிற் றவிர் பிறுறத்துல், மவுத்தெனுந்
தலைவனும் வாசிவீரருந், தவித்தவனு றாவலைச் சாற்றுமென்றுநற்
கவித்திற வினர்களுங் கண்ணுற் றாரரோ. (௱௰௮)

ஆயிரம்பரிவர வந்தபோதெழி, லாயிரஞ் சதமொழி யலறயு
மப்துல்லா, போயிர னியமுடிப் பத்துத் தன்னைக்கொண்
டோரக சியமாதா யிருந்தினாரோ. (௱௰௯)

புத்தகந் தனைமலைப் பொதும்பி னாடிற, வைத்துப்பின் மூவரும்
வழியுற்றார்வரும், பத்துநூ றரிதயிர்ப் பாண்டம் போலுமோர்,
மத்துநேர் சுபைபுறம் வாசிதூண்டினார். (௱௨௰)

தூண்டிய வாசியத் தன்னை லாரிட, மீண்டிட விருவரா
யிமைப்பி லெசுபைர், சென்றனர் மறுத்தொரு நெடிய னோடிநற்,
றெல்நிகழ் தொடைப்புயர் திலக்க வந்தனன். (௱௨௰௧)

தாடியிற் பெரியவன் றுக்கி னீண்டது, நீடிய வவனிகர நிலத்தில்
வீழ்ந்திடவே, யாடியிற் றிருப்பென வகன்று மூவரு, மோடியுற்
றவனொரு வோங்க லேறினார், (௱௨௰௨)

பிறங்கலி னேறினோர் பின்னிற் பற்றியே,திறங்கெழுந் தரியலர் சென்றநங் கேறலா, விறங்குமென் றுறுகலை யீழ்த்துருட்டினர், மறங்கொளிம் பதிபெயர் மடிந்து தீயுற்றார். (௱௨௩)

உறுகலை யொன்றுமே யுளத்தினுய்ந்திடாக்,கெறுவியர் தலைவனுங் கினைத்தென் பவன், றெறுகொலைக் கொடியவெஞ் சேனைவீ ரரின், மறுகலை நோக்கியே வசைகள் பேசுவான். (௱௨௪)

அலியிரு தாருகா லித றம்றமும்,பலிதரு மம்றுமன் பனுலன் றேரெலா, மலிபடைத் தளத்தொடும் வரினெவ் வாறுநீர், பொலிவமர் விளைப்பிர் போமென் றேவினன். (௱௨௫)

என்றறைந் திட விவை யிறைவன் றூதர்பாற், சென்றுரைத் திடவெனத் திடங்கொ ளேவைநேர், வென்றிகொள் ளம்றெனும் வீரரேகிமுன்,னின்றடி பணிந்தெலா நிகழ்த்தி னாரரோ. (௱௨௬)

அவர்வரும் வழித்தொலை பறைய மேழுமீல், கவனுகிற் கானடைக் கைந்துகாதமா.யிவையொரு சாஅத்தி னெய்தி வள்ளலார், சபையினுற் றுறைத்திட றளர்ந்து நின்றனர். (௱௨௭)

அன்னவ ராயிரர் சுடைபைடிச் சூழ்ந்தது,மன்னவர் பொருவது மரியவானுடிச், சென்னியித் நிகழ்ந்திடுஞ் செம்மல் கேட்டுடன், மன்னவி தவைமப்புகவமுத்தி னாரரோ. (௱௨௮)

சாற்றல்கேட் டவியெழச் சபிதி மன்னவர், போற்றியிங் கிருபியான் போவ னென்றனு,மாற்றருங் கீர்த்திநம் வள்ளலாரிருந், காற்றுணை நீவிர்காற் றிருமென் றோதினர். (௱௨௯)

இப்படி புரைத்தலி யிவுளி யேறியே, வெற்படி ருனுங்கிட விண்ணதிர்ந்திட,வெப்பெரு மன்னரு மிரிந்தங் கோடிட,மைப்படி கவிகையர் மகிழ் வெகினர். (௱௩௰)

எபிய வலிப்புலி யெவை நேரநாய்,வேகமுற் றொடியவ் வெற்பிற் சேர்ந்தவண், வாருறா மிருவரா வினைந்த காயிராஞ்,சாகரப் பெருக்கினைத் தாண்டி வந்தனர். (௱௩௧)

வேறு.

வருகின்ற வேலையுறு சுடைதென்ற வீரர்படை மனமஞ்சிடாது மகிழ்வாய்ப், பொருகின்ற தானுமயர் வதுதன்றி யாதியொரு பொருளின்று காவ லெனவே, பெருகுந் துவாமொழிதல் செவிசென்ற தானுமலி பிறதின்றிடாம லுறையூ,நிருகுங்கை வாளயிலி னெறிசென்றை யாறபெய ருயிர்பொன்றவீசி னரரோ. (௱௩௨)

ஐயாறு வீரருட இள்ளாவி போகவினு மவ்வாறுதாமிறெதிரா, யுய்யாது விழவொரு பொல்லாத காரிதெனு மொவ்வாததிர

னரிமேல், வையாளி யாகிநெடு மெய்யாவி போகவுற மல்லாடு
சூர ரவியார், நெய்யூறு கோவைவெயொரு புல்லேஹு நேர்வொருவ
நில்லாமலோடி னனரோ, (ாகூக)

வேறு.

வித்தார மூாகவலி வெட்டுதலி னென்னோர், பற்றுட லம்புரிபொ
டேபடியில் வீழ, வுற்றோர்க ளிற்கொடிய ஹுத்தமறி வீரன், சத்
தாது நால்வரொடு தாவியெதிர் கின்றான். (ாகூஉ

அன்னோர்க ளவரிட மண்ணலலி தாவி, மூன்று மொருத்தனை
மன் மூச்சொடு பிடித்தே, பின்னோர் திறத்தன்ழிலை யேறுற
வடிப்பத், துன்னார்கண் முட்டிபிடி தாளென விறந்தார். (ாகூரு)

இருபேரு மிப்படி யிறப்பவினு மாலி, மருவா னொருத்தனை
வெள் வாள்கொடு ததிப்பக், கருதார்கள் மற்றிருவர் கன்டயலி
னோடி, வெருவாகி மோதியவன் வீழ்ந்துடன் மடிந்தார். (ாகூங)

இப்பான்மை யாயவர்க ளெவரு மிறப்ப, வெற்போ டிணைந்த
புய வீரியன் கினைத், தொப்பாரு மில்லென வுரைத்தரி
நடத்தித், தப்பாது வெட்டுமலி தம்முன மடர்ந்தான். (ாகூஎ)

மதமார் பிறுமத்துல் மவுத்தவ னெதிர்த்தோர், விதமாக வாளமர்
விளைப்பவலி யல்லா, இதமாக வெப்பரி யிளைத்திய வனைத்தான்,
பதமாக வெட்டியிரு பஙிருசெயி திட்டார். (ாகூஅ)

அன்றே விறந்தபின ராலிசுபை றென்று, மன்னோடு கூடியிரு
மன்னனாவிருத்த முன்னே டிறைக்கிலவு சொலச்சிறிதி மூர்க்கர்,
பின்னோடி யுற்றுயிர் பிழைத்தனர்க ளன்றே. (ாகூகூ)

பிருபேரிறந்துசிலர் வீதியுறல் கண்டே, சுகியா ரலிப்புலி
சுபைறபுதுல் லாவு, மகிழ்வாகி வெஞ்சமர் மலைந்தவிட முற்றே,
தருவாசி யோடெவையு னாட்டிமெனுடு கொண்டார். (ாசுய)

எல்லா மெடுத்தபிற கேந்தலபு துல்லா, கல்லார் பொதும்
பிடை காத்தல்செய்பற் றுகை, மெல்லாக வங்கையதின் மீதுற
வெடுத்தே, நல்லோர் மகிழ்ந்தவலி நாதரிடம் வந்தார். (ாசுக)

ஆராய்வின் மிக்கபுதுல் லாவையலி யாருஞ், சீராகநோக்கியிது
சேரலர்க ளுக்குப், பேரார்பற் றுசுகிடி பேசிடுத லல்லோ, எராக
நீவிர்கொடிங் கெய்தவைவ சொன்மென்றார். (ாசுஉ)

வேறோர் மரச்சிலைவெந் தூக்கியுற லிங்கண், மாறுத காவலர்
மறித்ததுமெப் பேவா, ஒன்றோர் சுழந்ததயென வோதினதி னோ
டுத், தேறோர்மன நிறியி றேற்றின ரமப்பால். (ாசுங)

அன்னோர் பொருந்தவக முற்றதுவு மேன்மை, வெந்நார் மரச் சிலையுள் வைத்ததுவு மேவக், கன்னா சியம்புருவங் கைக்கொளது மெல்லாஞ், சொன்னோர் முகம்மதரின் றாதரவு தில்லா. (௱௪௪)

தேசார் நிலாமுகஞ் சிறந்தவபு தில்லா, கூசாம லேயினிது கூறவலி யுல்லா, தேசாதி யாய்முறுவ லீடிநயி னார்பா, லேசார நன்மொழி யிம்பியெழு கின்றார். (௱௪௫)

கன்னாச ளஞ்சிடவே கட்டுமெலி யுல்லா, மன்னாது கொன்றமரு வாரரிகண் மற்று, முன்னாய் நடத்தியிரு முத்தியர்களோடும், பன்னாக மேத்துநபி பாசறை யடுத்தார். (௱௪௬)

வேறு.

இந்தான சுபைறைக்கொடு மிறைவன்புலி யலியார், வந்தாரென விறசூல்மறை மகிழ்மன்னரை யெதிர்போய்ப், பிந்தாதழைத் தாறமென்றனர் பிசகாதுசென் றழைத்தே, சொந்தாரகு மதுபான்மிகு குழுவாகவே வந்தார். (௱௪௭)

மடத்தாழைமு ளெயிற்றார்பணி வரத்தானைமுன் கிழித்தே, படைத்தேயுற மறுத்தோர்புடை யதிற்றானெழ மிதித்தார், கடித்தாள்கடி விடத்தீவினை கரத்தால்வில கறுத்தா, ரிடத்தேசபை தீனைத்தானலி யிசைத்தேயுற விடுத்தார். (௱௪௮)

நறுந்தேனிரி செழுந்தாரணி நல்வாகபு தில்லா, மறந்தாவிய விபுலீசுறு வாய்மேவுபற் றாசென், றறுந்தேவது தலையும்மவ னொளிவீசிட வைத்தார், அறந்தோர்புகழ் நயினாரிற சூல்கண்டு மகிழ்ந்தே. (௱௪௯)

இருபேர்களு மவணேகின வெழில்வாறுகள் கேட்பப், பாரிகாரியப் தில்லாபெற பலனுஞ் சில கொணருந், திருவாறுநல் லம்றானவர் சோரார்பட வெட்டி, மருமேவிய சுபைறைக்கொடு வருமாறு முனைத்தார். (௱௫௰)

அருந்தாரணி யம்றோடுபல் லடையார்பிணி தீர்த்த, மருந்தோரபு தில்லாவையு மகிழ்வாயிறை யவன்பாற், கரந்தானணி பெறவேத்திமெய் கனிவாயுரை விண்டே, யிரந்தாரற மிவர்க்கேயென வெழிலார்முகம் மதுவே. (௱௫௧)

அம்று மப்துல்லாவும் சுபைறை பற்றுலைச்
கொணர்ந்தபடலம்-முற்றிற்று.

ஆக படலம்-௫௰௧ - ௯ - திருவிருத்தம் - ௩௭௯௬.

சிலாஜிவிமான்கொண்டபடலம்

வரிசைகொண்டவரு மதுமுகம்மதெனை மணமிகுந்தவிற சூலுல்
லா , பரிசனங்களொடு மகிழ்வினங்குறவெல் படுபெழுந்து
வெளியானபின்,கரிசனங்கள்பல வரசனங்குவிளை களவுசங்கதிகள்
யாவையு , முறைசெயும்படிமுன்மர்செய்கின்றகள முறுமகன்
றனிட மேவினான். (௧)

சிறைகிடந்தவரு மரகதங்கொடுசெய் சிலையதுந்திருடு போன
சொல் , விறைவனன்பினொடு பெறுமகன்செவியி லியையவங்
குமத மீறியே , குறைகிடந்தவுயி ரெனவெழுந்துரிய கொடிய
வெம்படையி னோடுமா,மறைகிடந்தமனை நபிபெரும்படையை
வளைபுவந்தெதி ரேறினான். (௨)

வள்ளலானவிற சூலுமற்றவரும் வாசிமீதினெதிராகிடக்,கள்
ளாவியது காமத்தின்பிறவி கசடனாகியசி லாஜிலோர் , கிள்ளை
யோட்டிமுசு லிமினிற்சிலர்கள் கீழ்விழப்படி முருக்கியே,வெள்
ளொணாதவிரு படையினுக்கிடை விளங்கிநின்றுவரு கென்றனன்.

அந்நகாலே யறம்றமன்பெரிய வச்சுவத்தினை நெருக்கியே
முன்னிநின்றுசி லாஜிலோடமர் முருக்கவேர்ர்பழுது பட்டத
ருன்னிமீட்டியுற வேமறுத்துமொரு வீரராமகு காபிதா,மொன்
னலார்க்கிறை மகனினோடுமெவ னுற்றுநேர்பொருவ தாயினார். ()

பொருதநினை ரிறப்பவேறுமொரு புரவிவீரரசு காபிதா, மரு
குமேவியமராடவன்னவர் யுமரசுமைந்தனெதிர் தாவியுட்,கருதி
யேசிறை வாரிநீட்சியுறு கழுகிலேற்றினை னனாருயி , ருரிமை
யானகவி மாவினோடகல வுண்மைவேதநபி கண்டனர். (௫)

வேறு.

காரண நபியது கண்டு வேகமா , யாரணத் தறிவுறு மறம்ற
மன்னரம் , பூரண மதிமுகம் பொருந்த நோக்கியோர் , வாரண
நேரவ னமற்செய்துற்றிடும். (௬)

அரசிளங்குமரனை யடர்ந்து வெல்லுமென், றுரைசெய வுடனவ
ருன்னி யோட்டியே,வினாவுகொண் டேசிந்தா வீர வேங்கைநே
ரிரசித வரைப்புய மிலங்க வீண்டினார். (௭)

னண்டியே றவுசல்கூ. விளவ றன்னுடன்,றுண்டிநின் றெதிர்த்தனை
ரவனுந் தாக்கினன், மீண்டிடுபின் னிவருமே சபதம்விண் டரோ
காண்டகாச் செய்கையிற் கடிந்து வெட்டினார், (௮)

வெட்டிய வாளினை விதற்பன் வேலினாற், றட்டினன் பின்னிரு
வோர் தம்முக , வட்டிலைக் கமலங்கண் மலறயத் தாளினன்
வான் முட்டிடவரிகளை விடுத்து மோதுகால். (௯)

அரசிளங் குமரனை யறம்ற மன்னவர், வரைசுமைப் படிமிசை
மலர்ந்து வீழ்தர,விரைவுகொண் டயிலினால் வீழ்த்திப் பற்றிமா
முரசருத் தமதுபா சறையை முன்னினார். (௰)

முன்னிவந் நிளவலை நபிமுன் னேவிடத்,துன்னுமுன் னருமை
யார் துணைவர் போலுநீ;புன்னுள மிசைகலி மாலைவ யோதென,
நன்னய மாய்வளல் நவிற்றினாரரோ. (௰௧)

கடிகமழ் நபியுரை காது பற்றவங்,கிடுதலை கவிழ்ந்தறுபின் னெடுத்
து நோக்கினீர் , விடுமொழி தவிர்த்திடும் வேண்டு நன்னிதி , யடி
யினிற் சொரிந்தகன் றிடுவ னென்றனன். (௰௨)

அன்னவ னிம்மொழி யறையக் கேட்டலும் , பொன்னொரு
பொருட்டலப் புந்தி கூர்ந்தியான் , சொன்னயங் கொள்கெனச்
சுழித்தங் கோதவே, முன்னின ரவன்றனை யானமுத்தியர். (௰௩)

அவன்றனை யிருவரும் புக்கெம் மண்ணலே , யிவன்றனை யிவ்
விர வெங்கள் பால்விடின் , பவந்தவிர் நெறிவரப் படுத்து
வோமென,வுவந்துகேட் டிடவுட னுதவி னாரரோ. (௰௪)

இருவருந் துணைவனை யினிது கூட்டியே, பொருவரும் படங்
கினுட் புகுந்து பின்னவற் , கருமறை நெறிமுறை யறைந்து
மாசிலாத், தெருளுறு மனமெனத் தேற்றி னாரரோ. (௰௫)

தேற்றியுற் றிரவெனுந் தீரன்மாறவே , போற்றியங் கிருவரும்
புதிய னைத்தொழ, வேற்றமா ரவர்தமை யிளவல் கூர்மையாய்
வேற்றுநோக் கின்றியே விழித் திருந்தனன். (௰௬)

தொழுதெழுந் திருவருந் துணை சிலாஜிலைக் , குழுவிடை நபி
முனங் கொணர வன்னவன்,வழுவகன் மறைக்கலி மாலை யோத
க்கேட், டெழிலிற ஞாலக மின்புற் றாரரோ. (௰௭)

சிலாஜிலீமான்கொண்டபடலமுற்றிற்று

ஆக படலம்-௯௨இ-திருவிருத்தம்-௩௭௱௨

இபுலீசுபுத்துக்கொணர்ந்தபடலம்.

மாரியங் கவிகையர் மகிழ்வுற் றேயரும், போரிய லின்றியே பொருந்த வங்குறும், வீரியன் றவுசுல்கூல் மேக மாவுற்றுப் பாரிடை துயரவெம் படையி னேடுமே. (௧)

சுபைறவன் விட்டக றுன்ப வாரிமேற், புவியணி தம்பிரான் போன தீவினை, கவியுமவ் வோடமே லேறிக் கான்மூளை, நபி பிடித் தலைந்தறி யாது நண்ணினான். (௨)

மன்னவன் வரல்கண்டு மகன்துகா மத்தோ, ருன்னியின் மிசை தரித் துவந்தங் கவ்வழி, தன்னி னுற் றருமையிற் றூஞ்ச்சி செய்தனு, மன்னவன் றழுவியா னனத்தை நோக்கியே. (௩

சிறைபடுஞ் சுபைறெனுந் தீனர் போனதுங், கறையுறுந் தம்பிரான் களவு போனது, மறவுறு பிருறத்துல் மவுத்துப் பட்டது, முறைநபிச காமலே மொழிந்திட் டானரோ. (௪)

தந்தையி னுரைகடன் செவியிற் சார்தலு, மைந்தனுந் துணை சிலா ஜினுதன் வாறெலா, நொந்தருந் துன்பமாய் நுவலக் கேட்டவன், வெந்தழன் மெழுகென விழுந் தயர்ந்தனன். (௫)

பரிவிடுத் தரசன்மா பரிவின் மூர்ச்சை யாய்த், தரைவிழக் குமரனங் கழுதி தாங்கியே, விரைவினி னற்பனீர் விசித் தேற்றியக், குரகதத் தேற்றுபு கொண்டு வந்தனன். (௬)

மூன்றுவெந் துயரலை மூழ்கி யார்கையி, னீன்றமைந் தனினுரை யிடியிற் றுக்கலாற், இன்றிய பேரகிழ்க் கிடங்கில் வீழ்கயந், தாண்டிட வேன்றிலாத் தகைமை யாயுற்றான். (௭)

வஞ்சகன் றவுசுல்கூ லிங்ஙன் வைகிட, நஞ்செனப் புவியெலா நடுக்குஞ் சூமனுள், எஞ்சவன் மாயையா மநேக மைந்தரின், விஞ்சையி னொருவனை விளித் தியம்புவான். (௮)

புவியினிற் றவுசுல்கூல் புதல்வர் சில்லரை; நபிதனின் தீனிலே யெடுத்த தானுநற், கவினுறு புத்தினைக் கவர்ந்த தாலுமென், பவமறுந் தீனினைப் பழிப்ப தாக்கியே. (௯)

பன்னவன் தீனினைப் பரப்பு வானதான், முன்னுறு புத்தனின் முறைமை யாகவொன், றெந்நக ரினும்புக ழிலங்கச் செய்தந்த, மன்னினுக் களிக்குவன் மன்னு முன்னமையாய். (௰)

அவ்வையி னீயதி னகட்டி னுற்றமா, கவ்வையுற் றிருப்பவர் கருத்துக் கேய்ந்ததாய்ச், செவ்விய வுத்திரந் தேர்ந் துலாத்திடிற், குவ்வினி லெவர்களுங் குழுமி யேத்துவார். (௰௧)

அப்படி யிலையெனி லவர்கள் யாருந்தின் , தப்பறப் புகுவர் நாந் தளர்வ மாகையா , லிப்படிச் செய்கென்று னீனன் மைந்தனு , மெய்ப்பொடு நலதென விருப்ப மாயினான். (௰௨)

மகனுமே நலதென மகிழ்வு கூர்ந்தபின் , பதையிபு லீசொரு பசிய ரத்தின, மிகலற விணைக்கிவைத் திரண்டு செம்மணி நருகதி ருறவதி னயன நாட்டினான். (௰௩)

மன்றுமுன் னுற்றபத் ருசைப் போலவே,புனைரும் பணியெலா முண்டு பண்ணிவான்,பின் னுடு வினன்மதி வீற்றிருந்தபோது, சென்னியின் மணிமுடி திகழச் சூட்டினான். (௰௪)

சூட்டுமச் சிலையினைத் துரிதமாகவே , நீட்டொளிப் பீடத்தி னிலவும் பொற்படம், பூட்டிமற் றியலெல்லாம் பொருந்தச் செய்ததி,சூட்டிவைத் தப்பினர் நளினமாகவே. (௰௫)

அத்திரி யொன்றினை யரிய மாணிக்கம் , வைத்தழுத் தியபடம் வாகிற் சூட்டதி, னுற்றவெந் நிடையினி லுயர்த்திப் பீடத்தைப், புத்திரத் தியற்றித்தான் பாகை சூட்டியே. (௰௬)

இரத்தின வடமுறுக்கிடையின் வீக்கிமா,கரத்தினிற் கோலொடுங் கதிரிலக்கும்வா, ளுரத்தினிற் சேர்த்திவெந் நுயர்ந்த கூனுமாய், வரத்தினின் முதியவர் வடிவு கொண்டனன். (௰௭)

வடிவுறுஞ் சிதவம் முசத்தி னீலிமாய்த்;துடியுறுஞ் செய்கெனச் சொல்லிக் கொண்டொரு, நெடியசெந் தொறுமிசை நில்வ வேறியே , கொடியவன் றவுல்கூல் குழுவை நோக்குற்றான். (௰௮)

தேவுறுமொட்டகந் திருப்பு நாசினூற், பாவிதன் கரத்தினிற் பற்றிப் பாளய , மேவுதித் திசையின் மேல்பயித் துக , டாவிய குரலெழச் சாற்றி வந்தனன். (௰௯)

பகர்தரும் பயித்தினின் பயன்க ளொட்டையே,யுகமுழு தினும் புக முடைய நாயனைச் , செகமதி லெவர்களுஞ் செல்வ மாகிடத் தருதியித் கொண்டுவா வென்ற தாமரோ. (௨௰)

ஒளியுறு நாயனை யொட்டகாதிகொடு , தெளிவதாய் நடவெனப் பயித்துச் செப்பியே , யருகிடை றவுசுல்கூ லருகு சென்றனன், மொழியிவை கண்டுமன் முகமலர்ந்தனன், (௨௧)

வேறு.

சதியினன் முகமலர்ந்த தன்மையம் முதிய னெக்கிப், பதியினி லனக்குமுன்னைப் பற்றிய பேர்கட் கெல்லா , மதிகநல் வலியும்

பெற மழைகளுங் குடிலின்றோது , மறிவல் நாயனீறந்து வாழ்
விப்பா ரென்றும் மின்னர். (உஉ)

116866

அறபிக டனிறுமென்மை யாகிய குறைஉகொ ணிவீர், மறுகுவ
தறைகவென்று மகிழ்வொடுங்கேட்டான் மன்னன், திறனொடு தம்
பிரான்பேர் செப்பிய செய்கை தன்ப, முறும்வர லாற்றையெல்
லா மோதுவன் கேண்மி னென்றே. (உங)

முன்னவ னிருந்தவாறு முழுமணித் தேவின்வாறு , மன்னவ
துலாக்கும்வாறு மடக்கியாள் வலியின் வாறு,மன்னவி படையின்
வாறு மக்கள்தீ ஞனவாறுங் , கன்னிய மணியத்தேவு களவுபோ
கின்ற வாறும். (உச)

பதிநல்லோர் பிடித்தவாறும் படைமிகப் பட்டவாறு, மதியின்
றே வினைத்தான் றேடி வாடிய வாறுமெல்லாந் , துதியொடு
விரித்தியாகச் சொற்றனன் மூதிய செய்காஞ் , சதியினன் கேட்
டுமன்னன் றன்னுள மகிழச் சொல்வான். (உரு)

தெருளறும் ஹவுசுல்கூடேல் செம்மணித் தம்பிரானை , யொருவு
ருந் திருடாருன்ற றுளந்திரு டினராமத்தைக் , கருதிய பவங்க
டீரக் கருத்தினிற் றேடாயென்ன , மருவிட வுளாத்தான்கேட்டு
மன்னவ தென்னென்றுறால். (உசா)

அண்ணறன் வசனங் கேட்டங் கறைந்தன னுடனஜாசீல்,விண்
ணக முடையநாயன் விருப்பா யாயிவனைக் காண , மண்ணகத்
தவன்றாதேவி வருத்தினன் சிலநாட்குள்ளுநன்,கண்ணகங் களிக்கக்
காண்பா யென்றினுங் கழறு வாறால். (உஎ)

உனையுவர் மறக்காரென்று முன்னின மயராவண்ண, மினிமை
கொண்ட டவர்போல்வைத்தே யிறைஞ்சவிங் கெனதுபாலிற்,றனி
யவர் வடிவினொன்று தந்துசெப் பினரித் தேவு , தொனிபெறச்
சுவாபு மீயுந் துன்பெலா மகற்று மென்றும். (உஅ)

அறங்களும் வலியும்வேண்டி யதிர்ப்புமற் றின்றிநல்ல , திறங்
கெழுந் தம்பிரானைச் சிந்தித்தோர் வாழ்வரல்லர் , திறங்கெழு
மொளிவுங்குன்றி நிந்திப்பி லாவரென்று , மறங்கெழுங் குபிரோ
ரெல்லா மனங்கொள வோதினுறால். (உகூ)

இட்டமுற்றிடவநேக மிசைத்தறு மிபுலீசுந்த, வொட்டகை
முழந்தாட்பூவி லூன்றிடப் படுத்தி மேமேல் , வட்டமுற் றிலங்கு
கின்ற மாணிக்கப் பிறையார் குப்பா , வுட்டனி லிருந்தபச்சை
யொளிசெய்தே வெடுத்து வைத்தான். (ஙய)

மரகத வுடலைக்கண்டார் மாணிக்க நயனங் கண்டார் , நிரை
மணி முடியைக் கண்டார் நெடுஞ்சுடர் வதனங்கண்டா ; ருரை
தரும் வாயைக்கண்டா ரொளிர்விடுங் குமிழைக் கண்டார்,கரவிரல்
வடிவைக்கண்டார் காறலை கனங்கண் டாரால். (௫௧)

கண்டவக் குபிரோ ரெல்லாங் கருத்தினுள் மகிழ்ந்தீ தற்றுரி
முன், பிண்டின னுலாகேட்டுற்ற விழல்செயித் தான்றேவுக்குட்,
கொண்டன னதற்பின்புத்தைக் கொடுவரு மந்தப்பொல்லா,வண்
டனங் கதனைப்போற்றி மலரடி யிறைஞ்சிச் சொல்வான். (௫௨)

அரியமெய்ப் பொருளே யாவு மமைக்கவு மழிக்க வல்லா
யுரியநின் னடியார்க்கெல்லா முதவியுத் தரங்கள் செய்தே,தரியல
ராகவந்தோர் தலையெலாஞ் சிதறி வீழ , வரிசையி னருள்வா
யென்ன வகைவகை வழுத்தினானுல். (௫௩)

முதியவன் வழுத்தும்போதம் முழுமர கதத்தின் றேவங், கித
மறச்சிரத்தைநீட்டி யிருவிழி களினுங் கோபங், கதுவனல் சிதறக்
காட்டிக் கடும்புகை வாயின்மீட்டிச், சதுபுற மிருக்கும்வீரர் தா
நடுங் கிடத்தொனித்தே. (௫௪)

கவனுமென் னடிமையான கணங்களே நானலாது , புவியினி
லுயன்வேறு புகலுதற் கில்லையாவு,மூவகைகொண் டாக்கிவைப்ப
னுடனழித் திடுவன் மீண்டு , மூவையவை தரம்போற் செய்வ
னெனவறைந் திருந்ததன்றே. (௫௫)

தேவுண செவியினேறச் சேனையரோடு மன்னு, மேவகங் களி
ப்புமீறி விறலரம் படைத்தோ மென்னத், தாவியங் கதனையேத்
தித் தனிதனி சுருதிட் டோராய்ப்,பாவிகள் கிடப்பமீண்டும் பல்
பல பயித்தோ திற்றே. (௫௬)

அவிரொளி மணித்தேவங்ங னறைந்திடும் பயித்தாமந்தக், கவி
தையின் மகனுவொன்னுர் காசினின் மணலைப்போலுங் குவியினு
மெளியதோவாங் கோவினு லெய்து வாட்டி, யுவகையிங் குங்கட்
டீவ னுறுமமர்க் கென்றதாமே. (௫௭)

இப்படி யவர்க்குத்தேவங் கிசைதரு மகனுவாகர், செப்பிய
கவிதைக் காந்தஞ் சிந்தைவல் விரும்பிற் பற்ற, வொப்பரும் வந்
தனத்தே டொட்டகமாடா டீர்த்து, தப்புறு குறுபான்செய்து
தருநைவேத் தியங்கள்செய்நார். (௫௮)

இடுகுற பாளி னூனே யெழிலுறச் சமைத்து மன்னன், முடுகி
வந் தண்ணவந்த முதியனே யழைக்க வன்றுன்,கடுகள வெளினுந்

னின்று துறக்கண்டவ் வரசன் செய்கை, சுடுமுண வருந்தாதென்
னை சொன்மென்று னவனுஞ் சொல்வான். (௫௯)

மலிதருஞ் சிஃறனுண மறைநபி தனையும் பொல்லா, அலிகையை
யுஞ் செகுத்தல்லாம லமுதற லருந்தே னென்னச், சலிகைபற்
றுசைக் கொண்டு சத்தியஞ் செய்து நீவிர், நலிவற வுண்மியெனன்
ன நஞ்சுறு நெஞ்சன் சொன்னான். (௬௰)

இன்னன வியம்பியின்னு மெதிர்ந்தியான் பொருது வெல்ல
வத்நவெம் படையிற்செல்கி றேனமர்க் கலன்க ளேந்திப், பின்ன
ணித் தாகநீங்கள் வருகவென் றுறுதி பேசிப், பொன்னக ரிழந்த
பொல்லாப் புந்திய னகன்று போனான். (௬௧)

இபுலீசு புத்துக்கொணர்ந்த படல - முற்றிற்று.

ஆ படலம் ௩௫ - இ - திருவிருத்தம் - ௲௭௯௫.

புத்துப் படைக்குப் போந்தபடலம்.

வல்லவன் முன்விவுகொண்டோ னேகமன் றவுசுல் கூலுஞ், சொல்
வினி னயமுங்கல்விச் சுகுணமுங் கொடையும்வல்ல, கல்வினை
யறத்செய் யாகக் கனிவுமெத் நலமுமார்ந்த, வில்லவன் ஜாமிஅத்
தங் கிருக்குமே னிலையிற் சார்ந்தான். (௧)

மேனிலை சார்ந்தனனை விளித்தரு கிருத்தி நோக்கிக், கூனிய
கிழவனின்பாய்க் கொடுவருந் தேவில் வாறுந், தேனினு மினிமை
யாகச் செப்பிய வாறும் பின்னர், தானிசைத் தகன்றவாறுஞ் சாற்
றினன் விளங்கவன்றே. (௨)

காதல னுரைத்தமாற்றங் காதலி செவியுட்கொண்டே, தீதகன்
மணிப்பற்றுச செப்பிடும் வாய்மையொன்றும், பேதகம் வருகா
தென்னப் பேசின ண்மகிழ்ந்துமன்னன், பாதகன் கொணர்ந்த
தேவார் பாசறை யிடத்தின் வந்தான். (௩)

வந்தமன் சேனையாவும் வருகெனத் திரட்டித் தேவைவமுந்திய
சோகின்மீதின் முழுமணிப் பிறையார் கூட்டி, விந்தினு மிலங்க
வெற்றியினியகத் தாமென்றேறுதுஞ்; சுந்தரன் கரத்திலீந்து தொ
னியெழப் புறப்பட்டானல். (௪)

புறப்பட்டான் சோங்கைக்கொண்டார் புன்மையன் கத்தாபென்
போன், சிறப்புறந் தேவிதென்றுஞ் சிந்தித்தோர்க் குதவு

முற்றுதிற மேவுபைய லாகியமு பாறக் , கற்றவிர வேகிநபி
பாசறை யடுப்ப,வொற்றர்நடை செய்யவவ னுன்னமைவரவோத்,
வெற்றிநபி முன்புகொடு போயவர் விடுத்தார். (௧௬)

ஆரண விளக்கையதி வின்முகிலை யெண்ணுக் , காரண முறுங்கட
வுளைக்கருணை யில்லைப் , பூரண மனக்கடலி னைப்பொகுறசெய்
பூவை, வாரணவு லாவினவா யேமகிழ்பு கண்டான். (௧௭)

கண்டுவினை வின்றெருறு விழித்திருக ணென்று , வண்டுகளி
கொண்டறம தென்நமதுவுண்டு,முண்டகநறும்பதமுகத்துமுடி
மீதே , கொண்டுபினர் விற்றலைகை கூப்பிநிலை நின்றான். (௧௮)

வில்லளவு நின்றவன் விளங்குவா சலாமு , நல்புகழ் மந்திரி
நவிற்றியசலாமுஞ்,சொல்லியணியொன்னையெழில்ரூம்பதமுன்
வைத்தவ்,வல்முதவர் சொன்னவை யெலாமவுஞ் விண்டான். ( )

அறவனைநத்நபியு மன்பிநொடழைத்தேர்,நன்றிமொழிபற்பல
நவிற்றிவிடை யீந்தப் , பொருந்றனை நல் தினவர்க ளுக்குமுறை
போல, வொன்றெனும் விடாதுபகிர்ந் தீந்தன ருவத்தார். (௨௰)

ஆசகனு நத்நபி யன்னேயமுற மன்னை , வாசிபதி னுயிரமொ
டேமலை வலம்பாற் , காசகல வேகுப சரந்திருமி னென்ன,
நேசமொடு சொற்றனர் நெடு பிரிய முற்றார். (௨௧)

காலிதெனு மும்மத கயத்தின விழித்தே, யோவிடு மயங்கள்
பதி னுயிரமொ டோங்கற், பாலினுற வேகியிட பாலிரு
மென்ன , நானுமறை யும்புகழு நத்நபி நவின்றார். (௨௨)

வள்ளலிற சூல்மருக ராமலியை நோக்கிக் , கிள்ளைபதி னுயிர
மொ டேகெழுமி யேகி , விள்ளரிய வெற்பினடு விற்றிருமி
னென்றோத் , தெள்ளமுத வாயிதழ் திறந்தினி தறைந்தார். (௨௩)

இன்னபடி சொன்னதொடு மேர்வளரு மம்மூ , மன்னவரையு
நோக்கிமரு வாரிவுளி யோசை , பன்னுசெவி கேட்கினுட னே
பரி நடத்தி , வின்னமற வெட்டுமென வெற்றியொடு சொற்றார்.

மேவுபுகழ் நத்நபி விளம்பவுட னன்றேர்,மூவொருப தாயிர
முனைத்திறல்வர் சூழக் , கோவிலயில் கற்கவண்வை கோணமழு
வேந்தித் ,தாவுபரி மூன்றுகைய தாக்கிநடை செய்தார். (௨௫)

வென்றியர்க ளேகிநபி விண்டவிட முற்றார் , துன்றிர வகன்ற
னல்வின் சூரிய னெழுந்தா , னன்றுநபி யும்படையு மத்திரியி
னுற்றார் , நன்றுகெடு மொன்னலரு நானுகமொடுற்றே. (௨௬)

கோதுமலி வானவிபு லீசுகொடுத்தேகத், தீதுசெறி கின்றசிலை யுற்றதொறு வைத்தான், பாதகன்வியத்துற பதாதிகளின் முன்னே மோதிட நடத்திமிகு மூர்க்கமொடொலித்தே. (உஎ)

நங்குடிக ளுக்குரிய நாயனம ராட, விங்குவர லாலெவரு மின்பொடு துணிந்தே, யங்குபுரு பச்சமற வார்த்திகனு மென்று, மங்குபடை யோர்மன மகிழ்ந்திட வறைந்தான். (உஅ)

வேறு.

அந்தகாலையி லம்புரா சிமையநிக ரெழுந்தே, யொன்னலார்படை யாவரு மொளிமணித் தேவு, பன்னும்வெற்றிநம் பாலளிப் பெனெனப் பலகாற், சொன்னவாய்மையின் படியமர் துணிவ மென் றுவந்தார். (உகூ)

கணிப்பிலாக் கதிக் கற்கிகள் கடற்சுழி கால்போற், றணிப்பிலா விசையொடும்விரிதலாயினிற்சூழ, மணிப்பற்றுசுறுமொட்[illegible]கை வாகனத்துடனங், கணித்த தாழ்மத றவுசுல்கூ லரசனு மடர்ந் தான். (ஙூ)

உவகை யுற்றுறு மொன்னலரொருப்படத் திரண்டே, நவுரி பம்பைக ளதிர்தர நடந்தமர் விளைப்பக், கவன்வெம்பரிக் கடலொடு கடையுகக் காறு, னவண[illegible]ர்த்தன போனபி படைகளு மடர்ந்தார். (ஙக)

இருவகைப்படை களுமெதிர்ந் திடனற வீண்டி, யொருவருக் கொரு வருமுள மஞ்சிடா விதமாய்ப், பொருகமார்பினுட் புகுமயில் புறத்தினுட்புறப்பட், டுருவிநின்றவ ரூரத்தினு மடர்ந் தன வன்றே. (ஙஉ)

வாசிபந்தென மண்டலித் திலக்குற மிதிப்பத், தூசிமண்டுதண் முகிலெனத் திடித்துவின் டாவ, வீசிவெட்டிடு முவணிவெற் புரத்தினு ளொளிப்பக், காசினிக்கொரு செந்நதி கலித்தெழப் பொருதார். (ஙங)

இன்னணம்பொரு காலையி னிறையவன் றூதர், தந்தரும்படை தளர்ந்தெனத் தளர்ந்திடும் படிபோர், மன்னிநிலிடு மாதவர்க் கோதின ரவர்கள், சொன்னவாறுபோ லெவர்களுந் துணிந்து பிந் தினரால். (ஙச)

பிந்துகின்றதைத் தரியலர் பிரளய நோக்கி, யிந்தவென்றிநந் தேவுதா னிரங்கிய தெனவே, யுந்தியைம்பது தினவரி தமையுறச் செலுத்துக், கந்துகங்களை நெருக்கியே கலகமிட் டனரால். (ஙரு)

அந்தவேளையி னருமதர் சொற்படி முன்ன,ருத்தியேமலை யிடத்தினி னொளித்திருந் தவர்கள் , மந்தராசல மடைக்கடை திறந்தமல் வருமா , நந்தமாகவே பரிவிடு பாக்ரமித் தடர்ந்தார். (௫௭)

மூன்றுகையினின் முப்பதி னாயிரம் புரவி.தாண்டுபுல்லெனத்தாவிடத் தானாவாளவியு,மூன்றுளித்திடு மயில்வல முறைந்தஅம்நரசுங் கின்றுமன்னனைச் செகுக்குங்கா விதுங்கெழு மினரால்.()

அறந்தவிர்த்திடுங் குபிரழிந் திடமலை யரசங் , குறைந்தசிங்கமோ டுழுவையை யொருத்தலை மடைவாய் , இறந்தனுப்பியபோல்வருஞ் ஜெயத்தினர் மூன்று, புறந்தனிற்குதித் தீண்டினர்போரரி களையே.

(௫௮)

மொழிந்தவர்தமா முப்பதி னாயிரம் பெயருங், குளிர்த்த,மைக்குடைக் குருநபி யொடுமுறு படையு,மெழுந்து நண்ணலரெனுமொருங் கணங்களைச் சூழ , வளைத்துகொண்டரும் வாட்கொடுதாக்[illegible]னர் மடிய.

(௫௯)

பொருப்புறுங்கயம் புவி[illegible] குழிவிழுந் தெனவு , நெருப்பதினடு நேர்[illegible] [illegible] , மருப்புறுங்கரிமுட்கனி யுருவுமா றெனவும் [illegible]ருப்புகுத்[illegible] யலர்களுமிருவமர் விளைத்தார்.

(௬௰)

வில்லினீண்டினர் வேலினினீ[illegible]டின ரிருகை,மல்லினீண்டினர்வாளினினீண்டினர்கவணில் கல்[illegible]னீண்டினர்கசையினினீண்டினர்கடற்போற் ,சொல்லினீண்டினர் தின்னிருபடைகளின்சூரர்.()

சிரமறுந்தன தேகங்க ளறுந்தன பரிசைக் , கரமறுந்தன காற்றுணை யறுந்தன கலனு , ரமறுந்தன வுதரங்க ளறுந்தன வுளைக்குந் , தரமறுந்தன குபிர்த்தரி யலர்களுக்கம்மா. (௬௨)

காற்றையொத்தவெம் பரிகளின் கணம்பல வறுத்த, சீற்றமுற்றவர் செழுங்கையின் கொடிபல வறுத்த,ஆற்றமிக்கவர் கரத்துறுகவிகைக ளொடித்த , மாற்றருங்கல னுதிர்த்தன மருவலர் படையில்.

(௬௩)

அலியறம்றமுங் காலிது மயிலினம் நரசுங் , கலினவெம்பரியினரசு காபியங்கடனு, மலிவினிவ்விதம் வதைப்பதின் மாற்றலர்மலைந்தே , நலிவிறேடவண் முறிந்தனர் நல்லவர் நகைப்ப. ()

வான்கிடந்துமுன் வல்லவ னுமைமறுத் ததனுன், மீன்கிடந்துகடருங்கடன் மேதினி யிழந்த , கூன்கிடந்தவன் கொணர்ந்தபுத்தினக்கொடு தரிபா,ருங்கிடந்தசெங் களமிழந் தோடின ரன்றே

மாலிடந்தகண் மடந்தையர் மணல் புரண் டலறக், காலிடந் தமைக் கருங்குழற் கல்லையு மணிந்த, தேனிடந்தசெம் மலர்களுஞ் சிதறவங் கவர்கம் , பேனிடந்தெனக் கிடந்தன ரிறந்த பேய்க் குயிரர். (சசு)

கருமனக்குயி ரினரிலை கடலென விறப்ப, மருமலர்ப்புய வரசனு மழுமடந் தையரும், வெருவியோடுபல் வீரரும் விரைந்து போய் நான்காஞ்,சருகினிற்புகுந் திருந்தனர் தத்தமி லயர்ந்தே

காற்றையொத்தவெம் புரவியுங் கலணையுஞ் சோடுங், கூற்றையொத்தவெங் கோணமுங் கூன்பிறைச் சிலையு, மாற்றையொத்த செங் குருதியார் களமிசை புகுந்து , நீற்றையொத்தநன் மனநிலைத் தினவ றொடுத்தே. (சஅ)

வென்றிசேர்படை மிகுதிவெட் டினமொரு போது , மின்று போர்ப்பலித் திலவென வேமமற் றெவையுங், குன்றுநேர்புயம் பூரிப்பிற் கொண்டுபோய் நபிட[illegible]ரி, முன்றலைவைத்தனர் மகிழ்ச்சி தோய்ந் தவரொடு மிருந்தார். (சகூ)

புத்துப்புடைக்குப்போந்தபடலமுற்றிற்று.

ஆகூ படலம் - கூச - இ - திருவிருத்தம் - தூஅ௱சஉ.

சல்காப்புறப்படுபடலம்

இன்னவண்ணமங் கிறையவன் றூதவ ரிறசூல் , நன்னயத்தசு காபிக ளொடுநா வலர்கள், வன்னமாப்புகழ்ந் தேத்திட மனமகிழ்ந் திருப்ப,மன்னனாகிய நவுசுல்கூல் செய்தியை மவுல்வாம்.()

மறங்கிடந்தமன் நவுசல்கூல் மகனிறகா மத்தலைவத்,திறங்குலைந்திரி சேனையைச் செலுத்திடச் சாட்டி, யிறங்கியில்லவ ணிருக்குமே மூன்றுசரு கிடத்திற், கறங்குகாலினு கடுவிசைப்புரவியிற் போந்தான். (உ)

வந்தமன்மனை புகுந்துதன் மனைவியை நோக்கி, யிந்தவாறனைத்தையு மிசைத்தழு திரங்க, வந்தவல்லியு மரற்றிக்கட் கடையினி லாலி, சிந்தநின்றன டிகைத்தரும் புதல்வனை நினைந்தே ()

மன்னனுந்திரு மடந்தையும் வழுவையும் பிடிபு, முன்னருங்கிடங்குற்றயர்ந் திடுவபோ லயர்காற், பன்னுமன்னவர் பயந்திடும் பதுமினிப் பாவை, யிந்தவன்னமென் றிசைக்கரும் படியெ திர்ந் தனளால். (௪)

வேறு.

வெள்ளிக்கரசாம் வித்துவமுதம் வெய்யோன்கதிருஞ் சரிகலந்தே,தெள்ளித்தெளித்து வடித்ததனுந் றெரிவையுருச்செய் தியற்றியதோ, புள்ளிப்படமார் பணிமணியோ பொன்னேறுதவாத் தினவறலோ, யுள்ளிப்படைத்த வடிவினளோ வர்கடிருமுன்னனுகினளே. (௫)

எண்ணுயிரங்கொம் பிடபமதோ ரெயிற்றுமெலடுத்த விரும்புவியிற், பெண்ணுக்கிடவே கடிப்பேசிப் பெலத்தோடுறுதொண்ணூறரசர், மண்ணுடிடவே பரிவிடுத்தே தோர்ப்பித்தவர்கண் மணமறுத்தாள்,விண்ணுடவர்வந்து தவிசெய்ய வெல்வாள்தாமத் தூல்கரவே. (௬)

வேறு.

கரியமைக்கடலி னெளித்த[illegible]ந்து கடுவினைக் கலவைபென்றணிந்த, வரியளி யினங்க ளிரவுகன்டுங்கு மளிகையோ வாசமுற்றிருந்த, வரியதற்பனிநீ ரழைத்தகிற்களப மணிந்தகிற் றூபமுமூட்டி,விரிதருதளவ வெள்ளிபூத்திலங்கி விளங்குகந் தாபெனுங் குழலாள். (௭)

வண்டுமொய்த் திருந்தேர் மலரிணைபுழக்கி மதுமழை பொழிதாக் கிடந்த,தண்டலைத் தடமோ திரடர வளர்ந்தோர் தலைநெளி கொன்றைநேயோ வ்வமை, விண்டிடாக் கூந்தற் கமுகுசை வலயோ மினுங்கவர்ந் தொழுகிலைய வகையா, பெண்டிசை விளங்க முடிப்பதற் கியைந்தங் கெழிலிரு டிரண்டநீள் குழலாள். (௮)

அழகுசெவ் வகத்தி மலரினி லறுகா லளியிருந் தெனவிரா பொருந்துங், களபநற் றிலத மணிந்தருஞ் சிலையைக் கணிச்சியைக் காம்படத் தேய்த்தேர், வளைவுகொண் டுலவு முகமுழு மதியின் மேற்றிசை தவழ்ந் துழன் றலகுங், குழலெனும் பெயர்கொள் கருமையிற் கீழ்பாற் பிறந்தகோ விளம்பிறை நுதலாள். (௯)

மாற்றல் ருயிரா விழிக்கணை தொடுத்து வாட்டிட வளைந்தகார் முகமோ,தோற்றிடக் காண்ட மெதிர்ந்திருந் ததுவோ சுடரெறி குக்குடத் தலைகோ, கூற்றெனக் கொடிய கொலைபல தேர்ந்த கொடுவரிக் கட்கட றன்னின், மேற்றிசைக் கனாயி னுறுதிறப் பவள மென்கொடி புறம்புரு வத்தாள். (௰)

உலையனத் புகுத்தி யடித்தடித் தமையா வுவணியம் பயிலினைச் சினங்கொண், டலையினைத் துளக்கி யருணனைத் துரத்தி யளியினைப் பறத்திமா வடுவை, விலையினிற் படுத்திக் கயற்கரு விளைகா வியையமு தம்புக முடுக்கிக், கொலைசெயக் கருதிக் கடுவொடு மிணங்கிக் கூற்றுடன் பழகுமை விழியாள். (௰௧)

வேறு.

கங்கைதெருறுங் கண்ணைக் கமலம்போற், றங்குமானனத் தைத்தழு வாமலே, மங்கிதூசனற் கத்தரி வள்ளையைப், பங்கமாகப் பழிக்கும்பொற் காதினள். (௰௨)

மிக்கசாணைக டேய விடுத்துமுன், பக்கமேயுருப் பாய்ந்துள் ளிலங்கிடத், தக்கதாகித் தயங்கிய தண்படி, மக்கலத்திலும் வாய்ந்த கபோலத்தாள். (௰௩)

எள்ளேவாட்டி யெழிறரு சண்பகத், துள்ளவேட்டை விரித்துளை வண்டினை, மெள்ளவாடி விரைந்தெழு கட்டனைக், கொள்ளுநீன்று கொ[illegible]ம்வள நாசியாள். (௰௪)

வேறு.

கிடந்துலர்ந் தறலி லவிந்திடக் குமுதக் கிளைகளை முளரியைப் புரிந்து,வடிவுறுந் துகிரை விழியை முடுக்கி மதுப்பிழி தொண்டையின் கனியைக், கொடிபடுத் தியும்புட் குலத்தினைச் செய்துங் கோபமொப் பிலையெனப் படுத்திப்,படியிலஞ்சுகமும் பூவையு மாயப் படுத்துபண் வாயினி னிதழாள். (௰௫)

முல்லையை முருந்தை மயில்டியிறகை முத்தைவென் றணிகொண்டமாதுவளை, மெல்லிய விதையை யணிதினப் படுத்தி மெல்லெனச் சிவந்தபொற் சிலைமேற், சொல்லுதற்கரிய வெண்ணரம் பொழுங்காய்த் தொடுத்தணி நிரைநிரை நிறுவுங் கல்லென வுருகா மனங்களைத் துருகக் கற்றபுன் னகைதரு நகையாள். (௰௬)

வேறு.

ஓதிமுகி லிற்கிடை யுதித்தினி தெழுந்த, பாதிமதி நெற்றியடி பார்த்துறிறை யிந்தோ, சாதிமணி மேவிய சரோருகம தென்ன மேதினியின் வெண்மணி விளங்குதம்வத னத்தாள். (௰௭)

தேன்முதி யாழ்கதலி சினிமுதிர் பாகோ, கரமெழுகு மாங்கனிகற் கன்டினி வருககை, யீனமறு கின்னாகுள விக்கரிய பூவை, தானுறழ்வு றுமதுரத் * தாலினுரை யாளே. (௰௮)

* தால் - நாக்கு

வேறு.

கருமுகிற் கணமுங் குழவிவெண் பிறையுங் காண்டரும் * பிரண்டையும் பிணையு,மருவிரி குமிழு மாடியும்,, வளையும் வளங்கொள்செல் வாம்பலு மதியு, மொருதலங் கிடப்பச் சுமந்திது கருமுதிரியுத் திரைதரும் வளையும், பொருவினும் பொருவா மணியணி பலவும் பூண்டழ கிலங்குமென் கழுத்தாள். (௰௯)

வேறு.

மின்னுகின்ற நல் வேயையுங், கன்னறன்னையுங் கத்தியா, லிந்நிலத்தினி லீர்வதாற், றன்னனீக்குமென் றோளினாள். (௨௰)

இனியராகத் தியாழினைத், தொனியினென்று தரத்திலே, மினியுரோமம் விளங்குசெங், கனகமேய்த்தமுன் கையினாள். (௨௧)

காந்தளென்னக் கதிர்கலந், தேய்ந்துதாமரை யென்னவே, வாய்ந்தமன்னர் வலிகடான், றேய்ந்திடச்செயுஞ் செங்கையாள். (௨௨)

சினையிருந்த செழுங்கெளிற், றினைமுனித்தி லஞ்சியே, புனல்புகப்பொனி ஞாழியை, வனையுமென்விரன் மன்னையாள். (௨௩)

கொஞ்சுகின்ற குதலையா, யிஞ்சொற்பேசி யெழில்பெறு, மஞ்சுகத்தல கானதின், மிஞ்சுகூருகிர் மேவினாள். (௨௪)

வேறு.

அரும்புபம்பரநற் சிமிழ்வரை முடியோ டாடெபத் [illegible] பரிகிழிகுது, குரும்பைபொற் குடமென் றகம்புமண் டல. [illegible] கோங்கரும் பிளவிள நீர்மண் ணிரும்புவிக் கலசநேமியங் குமிழியிலங்குசெப் பருங்கிணந் தாளம், பெரும்புதக் கரிக்கோ டிலவகளை முடிக்கிப் பெருமையுற் றிலங்குபொற் றனத்தாள். (௨௫)

உரம்படுத் தோங்கிப் பணைத்திறு மாந்தங் குல்வுகச் சறுத்தணிச் சுணங்கு, திரைதிரை செறிந்து தகாமும் புழுகு நீவிநற்பசலைபூத் திலங்கி,யிருவிழி கறுத்தங் கடர்ந்திளமை யாம லெதிர்த்தவ ராவியுள் ளடக்கித், தாளவொண் மணிப்பூண் டழைத்திழும் மதத்தின் றந்தியைப் பொருங்கன தனத்தாள். (௨௬)

கொங்கையென் றிணைந்த கோட்டுவா ரணத்தைக் கொழும்வயிற் றூலினிற் றழையுஞ், சங்கிலித் தடமோ தடப்படப் பணிவா னிமிர்த்ததோ தயங்கெறும் பொழுக்கோ, வெங்கயத் தறியோ காஞ்சிநன் மணியோ மெல்வடமோ சலாகையதோ,பைங்கொடி திலயோ மதன்மய தூமேலர் பகரடி வயிற்றறு முடியாள்.

---

* பிரண்டை - மயார்கொடி ,, வளையும் - வள்ளையும்

ஆலிலைநீள வடமதின் கீழ்பா லறற்கழி மல்ரல ரிலங்க, வோலி யேங்கடலி னுறநிலாயேற வொளிருநற் படிகிட ந்நிசைய வாலிப ரிலடயப் பட்டமுமால்வட்ட மு மமிப்புமான் குளம்பும்,பாலினி விருப்பக் கற்பெறும் வேலிபடர்கலை விசித்தமெல் லிடையாள்.

மின்னெனிப் பதங்காத் தடியென வுடையா மெல்லிளை நூலெனக் குழையாய் , பன்னகமெனமட் கமரினுட் புகுதாப் பைங்கொடி யெனக்கிரி படரா, தென்னுறு மரிபூங்கொம்பிலை துராத்தித் தேயிம கரனையு முடுக்கி,யிந்திலத் திசைமா ரனினுடல் போன்று மில்லையுன் டெனவுறு மிடையாள். (உகூ)

அரம்பையைக் குலையா லழிவுறப் படுத்தி யனநடை தரும் பிடி யதனின் , கரப்புழை யெனவே கடிந்துமென் மைய வாய்க் கவினுற விலங்குசெங் குறங்கா, எரும்புலி யலவன் றனை முகந் தேய்த்தங் கெழில்வரா வினைப்பயம் புகுத்தி, புரம்பெறு சிணைத்தூ ணியைநற்கா கிளத்தலை யுவமைசொல் லருங்கணைக் காலாள். (௩௰)

பொன்னிறுத் சமைத்த மணித்தரா சுவமை பொருத்தினும் பொருந்துறப் பறடாள் , வன[illegible]மார் கமடப் போத்தக மென வே மணிச்சிலம் பிசைபுற வடியாள் , மின்னனூர் கரத்தொட் டாடும்பொற் றிரட்டும் விளங்குபந் தெனுஞ்செழுங் குதியாள், பன்னுமோர் வயிரக் கதிருகி ரமைசெய் பவளமென் கொழுந் தணி[illegible]ாள். (௩௧

வ[illegible]டத் தலம்பு மேன்மையந் தடத்தின் மணிச்சிறைப் பெடையொடுஞ் சேவ, லனங்கிடந் தருங்கட் டேவிடக் குடைந் தங் கரியகண் டியிறாப் படுத்தே, தினங்கிடந் தலவு முளரியம் போதிற் செப்பலத் தகமணிந் தனபோற் , கனங்கிடந் தனைய கருங்குழன் மடவார் காங்கொடு வருடு பொற்பதத்தாள். (௩௨)

மலையினிற் பயிலு மிளம்பிடி யானை வருகின்ற சாயலோ வல் லா,விலங்கிய வருங்கட் டேவியின் றோகை யிணையடி பெயர்த்ததோ கமலத்,தலவிய நறும்போ தினித்திரி வனங்க ளுலவலோ சொல் லரு நடையாள், மெலமெல நடந்து தந்தைதா யிருக்கும் விக சிதவிடத்தைநண் ணினளால். (௩௩)

வேறு.

நண்ணிய மகளைநோக்கி நாட்பினின் றேற்போ டெல்லாங், கண்ணற றளிப்பவேந்தன் கவலக்கேட் டனலின்மீதே , யெண் ணெயை விடனும்புண்மே லெரியிரும் பிடனும்போல், வெண் ணமா ரவற்பார்த்தொப்பில் லெழிலுறுங் குமரி சொல்வாள். ()

எந்தையே யரசரேதே யென்றனை மூன்றுபேருஞ், சிந்தையு
டறிவும்வாய்ந்த ஜெயங்களு மிருந்தோ ராலே, யிந்தமா நிலத்தி
லொன்று ரியற்றிடுஞ் சிஃறுபாய, தந்திரந் தனக்கும் போர்க்குஞ்
சற்றெனு மயர்ந்தி டாரே. (௫௫)

அந்தமுப் புவியுமேன்மை யருமதின் கவிமாத் தன்னைச், சொன்
னதா லவர்தம்வேதந் தூயவன் விடுத்ததாகு, மென்னவே யந்த
வாய்மைக் கிணங்கிடிற் கொலையும்போரும், மன்னரும் பகையு
நீங்கிப் பல்பலன் பெறுவோ மென்றாள். (௫௬)

ஆயுநல் லறிவாலந்த வாயிழைசொலக்கேட் டண்ணல், நாய
னென் றறும்பற்றுசை நயந்திடா திவையோர் துன்னைக், காயும்
வன்னரகின்வீழ்த்திக் கரித்திடு வாரென் றேத, வாயிதழ் திறந்தங்
கின்னும் பயித்திரு லிதனைச் சொல்வாள் (௫௭)

விள்ளரும் பெருமையாக விளங்கிய தம்பிரானை, யெள்ளள
வெனினுங் கூச்ச மின்றியிப் புவியின் மீதிற், கொள்ளைகொண்
டவரு முய்ந்தே குறையற விருப்பதாலே, கள்ளருக் கடங்குத்
தேவைக் கருத்திரு தடக்கு மன்னே. (௫௮)

அனைத்தையுஞ் சடலங்கோட்டி யாவியங்கதனிற் பூட்டித், தினத்
தரா தரம்போலூட்டிச் செழுந்துகி லாடை சூட்டி, மனத்தையு
மிகுதிநீட்டி மறைவழி யறிவுங் காட்டி, நினைத்தலைக் † காசா
நாட்டி நிறுத்திறை யொருவன் மன்னே. (௫௯)

ஈதலாற் றிருடுபோன * வியற்றிலை யிறையா மென்னக், காதலா
யிருக்குமூடக் கருத்தைவிட் டமைத்த வல்லோன், வேதமே
யுளதாமென்றும் விறனபி யத்தநாயன், றாதரா மென்றுநாடித்
துலங்குதீன் புகுத வேண்டும். (௬௰)

இப்படி யொருமை கொண்டே யிரண்டரைக் கடிகை தங்கின்,
மைப்படி கவிகைவள்ளன் மருசறி விறைபாற் கெஞ்சி, மெய்ப்
படித் திருக்கும் பொன்னூர் மேனிலை வாழ்வின் பாகக், கைப்பட
வருள்வாரென்னக் காதலுற் றிசைத்து நின்றாள். (௬௧)

மகளுரை செவியிலேற மன்னவன் வெகுண்டுசீறி, முகமதி சேப்
பக்கையான் முடுகுபு தாக்கிமீண்டும், பகையிவ ளாகாதென்றும்
பரிவுறச் செகுப்பே னென்று, நகையுற வுரைத்தானங்கை
நவின்முக மயர்ந் தகன்றாள். (௬௨)

---

* காலெலன்பது தன்வசம் - † இயத்தியென்பது முயற்சி

ஆயுநல் லறிவுமூவா றாயுதத் தொழிலும் பூமேற், பாயும்வெம் பரியினேற்றும் படைபொரு திறனு மின்ப , வாயுளா நாகரீக வடிப்பமுந் தேர்ந்தசல்கா , மேவயுநற் கலன்களார்ப்ப வீதிமண் டபத்தைச் சார்ந்தாள். (௪௩)

அன்னவ ளிருக்கமேக மயனுரு தியற்றுமேடை , தன்னகம் புகுதவங்ஙன் றரித்தசே டியர்கள்வந்தே , யின்னெனச் சூழ்ந்து கூடி வேந்தர்கோன் மகளேயுன்பா, லென்னதுன் பெய்திற்றென் றே ரிசையொடுங் கேட்கச் சொல்வாள். (௪௪)

எனையொரு பிணிவந்தீண்டி யிருப்பதாற் போமினென்ன, வின வினோர்க் கோதியாய்ந்த மின்றனித் திருந்தோர் கத்தைத், தனிக ரங் கொண்டுதீட்டித் தன்னரும் ரகசியங்கண், மனமுறத் தெரிந்த பையன் வன்கரத் தளித்துச் சொல்வாள். (௪௫)

சாரிமேநீதான்மிக்க சங்கையா யின்னே நல்ல , வீரியன் கலைப்பு மைந்தன் விறலுறு முற்றத் தென்னும், பேரின னிடத்திலேகிப் பிறங்குமிக் கடிதமீந்து , கூரிருட் பொழுதினென்முன் கோதற வருதி யென்றும் (௪௬)

உன்னரு முடங்கலீந்திங் குற்றிடி னுனக்குநூறு, பொன்னளித் துரிமையாகப் பொருந்திட விடுவே னென்று, நன்னயத் தோடுஞ் சொன்னா னவிலுமச் சாரிமென்போ , னன்னபத் திரத்தைக் கொண்டங் ககன்றவன் கரத்தி லீந்தான். (௪௭)

தனுவிடு வாளிநேராய்ச் சாரிம்புக் களித்தகத்தை , யினிதுற முற்றத்தோர்ந்தே ரிருந்தயத் திருத்திப்பையன், மனமகிழ்ந் திடப் பொன்னூறு விலைபெறு மாலையொன்று , நனிகளித் தின்சொற் கூறி நன்னயத் தோடு மீந்தே. (௪௮)

முடிபுனை யரசனீன்ற முழுமதி முகத்தாள் முன்னே, கடிதினில் வருவனென்னைக் கழறெனக் கழறப்பையன், சடிலவே கமுப்பின் ஞகத் தாவிவந் தரியசல்கா , வடியிணை பரவியேத்தி யறைந்தன னனைத்துமன்றே. (௪௯)

அறைந்தவ னுரைகேட்டேரி ஞயிழை யிருப்ப வவ்வற், றிறந்தரு முற்றத் தென்போன் சினந்தரு மயில்வா ளேத்திப், பறந்தநேர் நடக்கும்வேகப் பரிமிசை யேறியங்ஙன் , றுறந்தவர்க் கிசைந்து வாழுந் தோகையார் சருகிற் சென்றான். (௫௰)

சென்றொரு சிலையின்சார்பிற் றெரிந்திட வரிதா யார்க்கு, நின் றணிகல னுந்தூசு நெருங்கொருகமரில் வைத்தே, வன்றிறற்பரியுங்

கட்டி மன்பத நடையதாக,மன்றலார் சல்காவைகு மணைக்கடை
வந்தா ணக்கால். (௫௧)

வையமே புரந்துவாழு மன்னவன் றவுசுல் சுல்தன் , லைகயிரு
ல்டிபட்டேகி யுற்றருள் கபீலைப் போற்றுஞ் , செய்யவாய்க்
குயிலிராகச் சேயிழை யலாதுமற்றத் , தையலா ரோடுமுள்ள
ஜனமெலா முறக்க முற்றூர். (௫௨)

ஜனமெலா முறங்குமவ்விற் றலைக்கடை வந்தவீரன் , மனமு
றைத் தொருகல்லேத்தி மணையகத் தெறிந்தா னக்கற்,பனுமொரு
தாதிமேலே படவெழுந் தெறிந்ததாரென்,றனதமாய்க் கேட்பச்
சல்கா வுறைத்திபா னுறங்கென் றுளே. (௫௩)

அறைதல்கேட் டந்தமின்று ளருந்துயில் புரிந்தாள் பின்னர்,
கறையறு சல்காவந்திற் கடைதிறந் தவனைநோக்கி , விறல்பெறு
சலாமுங்கூறி விடியுமுன் னடப்போமென்ன , நறைமொழி வழ
ங்கியுட்போய் ஞாட்பணி யணிவதானாள். (௫௪)

இரத்தின பரணமாற்றி யிலங்குது சங்கி சாத்தி , யுரத்தினு
ரரும்புதோன்று தொளிர்மணிக் கவசம் பூட்டிச், சிரத்தினுன்
மணியின்மோலி சேர்த்தியள் ளிலைவேல் வாளுங் , கரத்திலே யுற
மற்றுபு தங்களு மணித்தா ளன்றே. (௫௫)

போர்விழிக் கணைக்குநாணிப் புகுந்தொளித் திருந்தவென்னக்,
கூர்மையத் திரங்கள்வைகுந் கோதையின் கணைக்காற் கொல்கி,
யேர்தரு முதுகினேறி யிணைத்தவா றிறுக்கப்பெற்றுச் , சோர்
வொடுங் கிடப்பதொத்த தூணியிற் பறத்தாரி பான்மை. (௫௬)

கரியமென் புருவமென்னுங் கார்முக மிரண்டும்பூவி , லொரு
வரும் வளைக்காதாகி யுறவளைந் தொளிர்கணென்னு , மிருசரந்
தொடுத்தநோக்கி யென்செய்வோ மெனவோரோங்கற்,சருகிடை
பதுங்கலொத்த சாற்றும்விற் புயத்தார் வண்மை. (௫௭)

அதஞ்செய்யு மிரும்புக்கொல்கி யரியின்பாற் புகுந்தொத்த
இதஞ்செய்யுங் கணிச்சியஞ்சிற் றிடையினி லார்ந்தபான்மை
மதஞ்செய்யப் பின்னில்வார மன்னரைச் சுடுவேனென்னப்,
பதங்கன்வந் துற்றதொத்த பரிசைவெந் நார்ந்தநேர்மை. (௫௮)

நுதலெனும் பிறையி னுப்ப னுட்பமார் திலதந் தீட்டி , வித
விதமலர்கள் பூக்கும் விகசிதக் காவின் கண்ணே, யதிவித வுதக
மூறு மலர்த்தையிற் பட்டருகின்ற , சததள கமலம்போன்ற தாளி
னிற் கபுசுந் தொட்டாள். (௫௯)

வேந்தர்கள் வேந்தர் மெய்யில் வேய்வன யாவும் வேய்ந்து
காய்ந்தசெங் கதிரோ னுத்த கதிரயி லோடுங் கோணம், வாய்ந்த
செங் கரங்கடன்னை மலையுமாந் தளிரும் போல, வேந்திவல் லவ
னைப்போற்றி யில்லைவிட் டகல்வந்தே. (௬௰)

மதியினைப் பழித்திலங்கும் வதனமே லாடை யிட்டோர், கதிகளைந்
தொடுமு வேகங் காற்குரத் தூட்டு மின்போற், குதிகளு மிடிநேர்
தாக்குங் குலைசயின்வாய் நுரைநீர் பூணைவச், சதிகொளுங் கடலை
யொப்பத் தரித்தமா மிசைகொண் டாளால். (௬௧)

வேறு.

பரியேறி யுடனங்கு வருகாயி ரொடுதங்கு பரிவாக நடைகொண்
டபோ, திருண்மேவு மனன்மூத்த வளைமேவு கமரின்க ணிடு
இன்னை பொருள்கொண்டரோ, திருவாரு முகமங்கை யருகாக
விளைமூங்கு தெருவீதி பலபிந்தவே, விளைவாக விருபேரு மய
ராது திடனுக மிகுதூர வழியேகியும். (௬௨)

கருதார்கள் பணிகல்லை விடுநேர்மை யுளமெல்லி கருதாசை
வெளியாகிடா, திருபேரு மொருசொல்லி னிருளோறு நடுவல்லி
னெழில்வாசி விடுபோங்கியார், தருவான வில்கவிஃவ நலமாது
வளைநெல்லி சதகோடி களினோடுமே, மருவீசு சிறுமல்லி கையி
னோடு கொடிமுல்லை வகைமேவு பொழினீங்கியே. (௬௩)

மலைமேவு தருசந்தனமதோடு கொழுவிஞ்சிமணிவாழை மிகு
பூகமே, நிலையாசி னிகள்சம்பகமதோடு புலிகொன்றை யெழி
லுவ னறையார்பலா, பலவாரு மாமேவி மிடைவான வொரு
சோலை பரிவாக வெதிர்கண்டரோ, நிலமீது திகள்பாவ விளைவாக
வதிலாகி நெடுவாவி புடைமேவியே. (௬௪)

இவணுரு மறனன்மை யெனவெண்ணி யரிநின்று மிழிபோகை
யதுமீறியே, யவர்பாலி னுளமூர லதுகொண்டு பசியாறி யறல்
வாரி யுணுபங்கனே, சுவையான மொழிபேசி யுறுபோது மட
மாது சுகமாக வவணோடுமே, கவைகாண வையமோடு மெலிதாக
வொருவாய்மை கதிமேவு மியஃகூறுவாள். (௬௫)

எனதாவி யுறநீவான கலைதேரு துணைவோர்களியல்வேத நபி
பாவிலாய், தனிசீர்கொள் கவிமாலை நவில்பேரி னுறலாலந் நல
வான வழிமீதிலே, யினிதோடு புகயானு மிசைநாடி வரலான னெழி
லாள வுனதேசிலா, மனமாய்வு கொடுபேச னெனவாகு மொழி
கூற மதமாக வவணோதுவான். (௬௬)

வேறு.

ஜெகதலத் தினிற்பல சிஃறு றாகிய , வருமதின் மறைவழி யாக
வேண்டுமென , விகலற வுரைத்தநீ யிருளை யல்லையாய்ப் , பகர்வ
துண் டெனிற்கொலை படுத்து வேனென்றான். (௬௭)

இன்னபான் மையினவ னிசைத்தல் கேட்டரு , முன்னுளத்
தெரியயா னுரைத்த தன்றியே, யன்னவன் மறைவழி யாவ தேறு
வென, மன்மகா ரிக்குமகள் வழுத்தி னளரோ. (௬௮)

உரையிஃ தாடிமின் னுளத்தி லிங்கிவன், றரும்பகை யாதலாற்
சதிக்க வேண்டுமெனக்,கருதிநல் லுணாயினிற் களிப்புண் டாக்கிமா
பிரிசமு முறும்படி பிரவை காட்டினள். (௬௯)

அழகினி லுறைதவி லன்பி லாழியார் , வளைபிறை நுதலினண்
மருட்ட வன்னவன், பழுதகல் களிப்பெனும் பரவை மூழ்கியே
விழைவொடுங் கள்வயின் வீங்க மாந்தினன். (௭௰)

தனதுகை யிருந்தகட் டளையுண் டாங்கவன், மனமகிழ்ந் திருக்
கையின் மருள்வந் தீண்டலாற், றீனுமவண் படுத்துக்கண் டுஞ்கக்
கண்டுமான், றெனியெழ வாளினு லவனைத் துண்டித்தாள். (௭௧)

சல்காபுறப்படுபடலமுற்றிற்று

ஆ படலம் - ௫௫ - இ - திருவிருத்தம் - ௩௲௯௰௫.

சல்காபோர்புரிபடலம்

தீநெறிக் கிணங்கிலாச் செறுந ருவிவின் , போனதாற் பிருதி
விற் புகைத்து மாதுற,வினைவெங் குபிரின ரிழிவு காண்பபோற்
பானுவுங் கதிர்விழி பரப்பி வந்தனன். (௧)

அவ்விரு ளினில்வரு மரிய மாதினுக், கெல்லைக டவமிடா தின்
பங் கூர்ந்திட, நல்விய லாறுகாட் டிகளி னட்புறே , சொல்லையி
னெழுந்தன னுதய பானுவே. (௨

நிறைமதி முகமயி லீந்து மாற்றினத் , துறைமுகஞ் சேர்க்க
வோர் தோணி யாயிர , மறுவறு சவளத்தாற் றுழாவி வந்தபோ
லறைகுடக் கரியரி யரியொடுந் தோன்றிற்றே. (௩)

சூரிய னெழுந்திடச்சூர மன்னர்போ,லுரிசல் காவெனு நங்கை
தன்னருஞ் , சீரிய பரிமிசை யிடத்தி னேறிவின் , மாரியங் கவி
கையார் வழிவைய நாடியே. (௪)

மறுவறு கின்றவவ் வாசி தூண்டிமுன் , செறுநெறி நீந்தியே
செல்லும்போதினிற், கறுவொடு மொருவனோர் கற்கி யேறிமன்
னுறுமமர்க் களம்விடுத் தோடி வந்தனன். (௫)

வந்தவன் வாசியு மாதின்வாசியு மந்தநல் லாற்றினி லடுப்ப மங்
கைதஞ், சிந்தையுற் றொருசலாஞ் செப்பக் கேட்டவ, னெந்தவு
ருனக்கென விறைவ வின்பினாள். (௬)

அதனென்னு நகரைவிட் டகல்கிறேனல , பதிதிகா முக்கெனப்
பகரப்போதவன் , குதிரையின் குளம்படி யிடறக் கோதிலா,
முதியநற் றபியையழ தேவி யென்றனன். (௭)

பரிப்பத மிடறவப் பகைஞன் சொன்னசொற் , பொருப்பு
றழ் குயத்தியுட் புகுதக் கட்கடை.,நெருப்பெழு பவன்றலை நிலத்
தின் வீட்டிவிட் , டிரைப்புறு புலியென வேகு மெல்லையில்.()

ஆசிக மிசைபல் சூரர் முன்னிவந், தோகையி னறபிக ளுடற்பி
றப்புவே,காசினி னுன்பதி கருதிச் செல்பதி,பேசுக வென்றனும்
பெண்க ளுயகம். (௯)

வரிசையென் பதிபுகழ் மதீன மாமென , வுரைசெய வுடனவ
ருடன்று சீறியே, பரியொடு மடர்ந்துறப் பாவை வாளினு, லிரு
வர்க் டமையவ ணீர்ந்துவிட்டரோ. (௰)

அவ்விடம் விடுத்துமிக் ககன்றுமார்கையிற், குவ்விளித் றுகண்
முகிற் குலங்கள் போலெழப் , பவ்வமென் றமலையின் ரிக
ளாந்துற , நவ்விவண் டயில்கணை நயனங் கண்டனள். (௰௧)

கண்டகண் ணிமைக்குமுன் கற்கிறா ரொடு , மண்டல ரடுத்துதீ
யார்கொ லென்றனும் , விண்டனள் நபியசு காபு வீரரிற் , திண்
டிறம் பொருந்திய ஜெயத்த னென்னவே. (௰௨)

அன்னமென் னடைதரு மன்ன மாதுதாஞ், சொன்னசொற்
கேட்டுடன் றுன்ன லார்களிற் , பன்னரு மொருவன்றன் பரியை
யோட்டிபேர் , மன்னர்நே ருறமத்த மயில்மு னுற்றனன். (௰௩)

முன்னினுற் றவன்மிக மோதி வீசனுந் , தந்நபி லான்மெலத்
தடுத்து மாமயி,லுன்னியி னுறுபவ னூரத்தி னேர்புகுத்;திந்நிலத்
தினில்விழ வீண்டிக் குத்தினாள். (௰௪)

அவனுயி ரறவுட் றுறு நான்குமே , ருவகையுற் றெவ்வொரு
பெயர்க ளாகவந் திவளுட னெதிர்பொரு தெவரும் வீழக்கண்,
டவர்குழு யாவரு மடர்க வென்றனர். (௰௫)

என்றவ ருரைத்தல்கேட் டெவர்க்குமுன்னிலை, நின்றவ னவர்
களை நிமிர நோக்கியே,யொன்றிய னுக்குப்பல் லாக்க ரீண்டுதல்,
வென்றியின் றெனவனார் விலகச் செய்தரோ. (௰௬)

இவன்றனைச் செருக்கயா னேகிறேனென்று, வவன்பல பயித்
தொடு மடர வீரமாய்ப்,பவந்திரண் டவன்படப் பரியைத் தட்
டிவிட், டுவந்தயி லாரம்பட வூன்றி வீழ்த்தினான். (௰௭)

தலைமைய னிறந்திடத் தரிய லாரெலா, நிலமிசை வளைத்தரி
நெருக்கு வோமெனச், சொலியவர் சதுபுறஞ் சூர வீரமாய்,
மலிபுகழ் தரும்சல்கா மயிலைச் சூழ்ந்தனர். (௰௮)

கதிகளைந் தின்பரிக் காயிர் சூழ்தலுஞ், சதியுறு மென்றுதாஞ்
சார்த ருடைவெண், மதிமுகத் தெதிரிரு மலர்க்கை யேந்தியோர்,
புதியவன் றனை நனி புகழ்ந்து வாழ்த்தியே. (௰௯)

கனதியா ரகுமதின் ஹக்குக் கொண்டியா, னாதிடங் கேட்
கிறே னுயர்ந்த வந்நபி, யினின்மறை யுளதெனி லவனைக் காண்
குமட், டெனதுயிர் காத்தரு ளேகவென் றிரந்தாள். (உ௰)

இருகையு மேந்திமா னிரந்து கேட்டலு, மரியவ னுடன்றந்தை
யாயி சீதவுமற், றரியன யாவும்விட் டொளிர்மு கம்மதை,யொ
ருமைகொ ளுளத்தினி லுறுதி காணவே. (உக)

திருவளர் வானவா யேவச் செப்பவ,ரொருநிமை யிமைக்குமு
னுக்[illegible]றி னெண்ணிலர்,மருவுறு பசுந்துகில் வனைந்[illegible] வாளொடு,
மரி[illegible]யை வினயவட யானைச் சுற்றினார். (உஉ)

வேறு.

கொந்தாரிமை யவர்தாமிகு குழுவாக வளைந்தே, யிந்தானன
மடவாள்களி யிசைவாரி குளிப்பப்,பிந்தாதவ னுறுமொன்னலர்
பெயராது பிடித்தே, பந்தாடின ரரியோடவர் பகர்வானள
வுறவே. (உங)

பரியோடு முயர்ந்தேயவர் படிமேல்விழ வருகா,லரியோன்ரு
ளமரோர்சில ரழகார்கர மேந்து,மெரிவாளதி னுறுதானையை
யிடவேயதின் மோதி, யிருபாதிக ளாய்நாய்நரி யினைசெய்திட
லாவார். (உச)

அறிவின்புக ழமரோர்பெரு மரியோடடை யலரை, யெதிகின்
றது தனிலேசில ரிருண்மாமுகி லளவாய், மய்யுந்திரை வளபூ
வுறு மணவோடும் விழுந்தே,முறிகொண்டவி படலாலயின் முதிர்
கன்னலை நேரும். (உரு)

பூமாதிவை கண்டேமிகு புகழ்மேவிய நயிமார், கோமானிற
சூலேலரருள் கொண்டானவை யாவுஞ் சிமாறொரு துய்யோனளி
செய்தாமெனன மனமுழ, டைமானிலெ யெழுகூறுமு னினுமீறின
ராகி. (௨௬)

அமரானதின் மிசையேமிகு மமரோர்களி னணிதான், சமதா
னரு ளால்வாள்கொடு சமராடிய தறமா, லெமையாளுதல்
கடனுகின விறசூல்நயி னுரே,யுமதாரண நெறிபூடுற வுதவீரென
விண்டாள். (௨௭)

மருவாரெழு பதினைவர்கள் மாவோடுயிர் பொன்ற, வரும்வா
னவர் செலமாமயில் வடிவாரிற சூலி, னருகாகுவ மெனவேயரி
விலாவாய்விடு புயர்வார், பெருமாமலை மிகுசோலைகள் பிறகா
கிட வந்தாள். (௨௮)

கடிதாய்வரு மடமானிறை கபிபாகிய விறசூல், படையார்மிகு
ஜெய்மாயுறு பகர்பாசறை தனையே, முடுகாயுறு பொழுதேது
யர் முதிர்வானது மவளோர், திடனுனதி னொடும்யாவுமே தெளி
வோடுற மொழிவாம். (௨௯)

வேறு.

ஈட்டமாய்மிகு தூசிபொங்கி யெழுந்திடும்படி வேகமாய்க்,
காட்டிலேயொரு கலையையேயடி காலினேர்விசை தாவிமுன்,
னோட்டமாகவி ரண்டுவாலிப ருன்னிவிட்டு விரட்டியே, வேட்
டையாடுபு வருதிறந்தனை வீரமாமயில் கண்டனள். (௩௰)

அந்தவாசியி ரண்டுமோடி யடுத்திடாதயர் வாகியே, பிந்துமேவர்
கலை முந்தியேபெல மோடிமேகுதி கொள்வதால்,விந்தைமேவிய
மாதுகிள்ளையை மின்னைநேர்விடு பேகியோர்,சிந்தையூடு மகிழ்ந்
துவீறொடு சென்றடுத்ததை வவ்வினாள். (௩௧)

மின்னுநுண்ணிடை யாளகப்படு மேன்புல்வாயதை யீர்த்துடன்
றன்னிடத்தினி லேயிருந்திடு சக்கிமுக்கி நெருப்பினுற், றின்ன
வென்று பொசிக்கி வெம்பசி தீரவுண்டறன் மாற்றியே, யின்னு
மிஞ்சு மிறைச்சிதன்னரு கிட்டிருந்தனள் கெட்டியாள். (௩௨)

மாதுகிள்ளை விடுத்தருஞ்சிலை வாளியென்ன விரைந்துநேர்,
மோதியேகரு மான்பிடித்துற முறைமையாவையு மேதெரிந்,
தேதிலாவிரு பேருமேயிவ னெங்குளானறி வோமெனக், காதல்
கொண்டெழி லாகவங்குறு கன்னிதன்னிட முன்னினார். (௩௩)

முன்னும்வீரா யசறபத்தொடு முகல்கிலென்று மறிந்தவ,ரின்
னுமேயறி வோமெனுமொழி யின்றியாரமுக வாடையா, லன்ன

மன்னவ ருடற்பிறப்பென வதித்திடாதுநவ மாய்ஒங்கே , நன்ன
யம்பெறு மறமியேயவரு நாடுசொலீமென வினவினார் (௬௪)

என்றுநேர்மைகொள் கற்பினாளுட னேந்தமாயெமன் கட்டி
லார் , வென்றிமேவிய அதனிலேபுகழ் வீசுகின்ற சபாவெனும்,
மன்றலார்பதி யாளனென்ன வழுத்தி நீரு மிறைச்சியைத், தின்றி
டச்சணம் வம்பினென்னவர் தேனுவிட்டு மிறங்கினார். (௬௫)

வேறு.

இறங்கிய விருவர்தாமு மின்பமாய் மாதைநோக்கி,யறங்செழு
மறமிமேயோரி னரியநற் றலைமையோய்நுந் , திறங்களும் வலியும்
வாய்ந்த ஜெயங்க ளுஞ் செயது நோக்கிப்,பிறங்குமிவ் வுலகினில்
லாப் பிரியமுற் றடைந்திட் டேமால். (௬௬)

ஆதலா லும்மையாங்க ளறிய நன் முகத்திரையை,மேதையா யெ
டுமென்றோத மெல்லிமெல் லெனவேநீக்க , வேதிலா வதனமீதி
லிலறமுகம்மதரின் பேரிற், றீதிலா திமான்கொண்ட செவ்வியுற்
றிலங்கக் கண்டார். (௬௭)

இலங்குசெம் முகத்தைக்கண்டா ரிளம்பிறை நுதலைக் கண்டார்,
துலங்குவிற் புருவைக்கண்டார் துணைவிழி வேலைக்கண்டார்,ஜலங்
செழுங் குமிழைக்கண்டார் தரளவெண் ணகையைக் கண்டா,
ரலங்கலுற் றிருக்குந்தோளி லங்கிழுத் திருக்கக் கண்டார். (௬௮)

மருங்கமர்க் கலன்கள் கண்டார் மகுடமா முடியைக் கண்டார்,
தருங்கர வுவணிகண்டார் தாங்கியி லிலங்கக் கண்டா , ருரங்கொ
ளுஞ் சிலையைக் கண்டா ருற்றபொற் றாணி கண்டா ,ரிரங்கியங்
கவளைநோக்கி யெங்கள்சல் காவே யென்றார். (௬௯)

மனமிகக் களிப்பாயெங்கள் மகிழுடற் பிறப்பே மின்னே,
கனகமென் மணியேபூவிற் கவின்பெறுங் குயிலே வொவ்வா,வினி
ய நன் மயிலேவாய்ந்த விளங்கிளி யனையேயுன்பால் , வினையவ
னுற்றதென்னை விளம்பென விதனைக் கேட்டார். (௭௰)

வந்ததே னடித்தா னின்றுன் வாறெனவ மறைநேர் வின்டேன்,
றந்தைதா னுணர்வு ளாறோ விலைத்தனி வழியேன் கூறி,யந்தமுற்
றத்தோடார்ந்தே னவனெங்கே யறுத்தே னேதால்,வித்தைசேர்
நபியையேத்த விலக்கின னதனாலென்றும். (௭௧)

தகப்பனுக் குறுதிகூறிச் சண்டையாய்ப் பிரிந்த வாறு, மிகைத்
தூர் பாலைதமீதில் வெஞ்சமர் விளைத்த வாறும் , பகைப்பினை

வைத்துப்பேர்கள் படும்படி பொருத வாறுஞ், ஜெகத்தினி லமர ரீண்டிச் செருவிளைத் தழித்த வாறும். (௪௨)

வாதிலா விறலருனல்லா மலரடி யிறைஞ்சி யேத்தித், தீதிலாக் கவிமாச்சொல்லச் சித்தித்தங் குற்றவாறு,மாதவே தனைவரான வுபயமன் னருமன்பாகி, யாதிநா யகனைப் போற்றி யத்திலத் திருந்தா ரன்றே. (௪௩)

பாருதேன் பழநற்சீனி பாலினை பொருந்திடாத, நாகரீ கமதாயன்னோர் நவிற்றவ ணிருக்க விப்பாற், றுகமா னவர்க்குமேவும் பின் றகைமையாம் றவுசுல் கூலின், வாகுசேர்மனையி லுற்ற வண்மையை வழுத்துவாமே. (௪௪)

எனதுகண் மணியாய்மேன்மை யிருதயக் கனியா யீரற், றனி லுறுகொழுந்தாய்வாய்ந்த சகலசற் குணமாயின்ற, வுனதுயிர்க் குயிராஞ் சல்கா வோரடி பட்டென் கையான், மனமிக முனிவா மேயுகும் வகையினல் வருத்த முற்றேன். (௪௫)

அடிபடுங் கோபத்தாலே ரடிபெயர்த் தேகுமின்னாள், வடிவுறும் புகழ்ப்பற்றுகை வணங்குவ தொழிந்து முன்னர், படியினி லகுமதென்போன் பாலுறுநமதுமக்க, ளிடஞ்செல லொருகாலங்க ணெழப்புறப் படவும் போதும். (௪௬)

ஆகையா லதற்குமுன்னே யவன்மனை புகுந்து வேண்டும், பாருநேர் மொழிகள்பேசிப் பாகமாய்த் தேற்று கென்ன, வாருவாய்ச் சொல்லமன்னன் மனைவிதன் மகளைநாடி, யேகியே யவடன்மாடத் தினிகம் புக்கினாளால். (௪௭)

சென்றவன் மகளையன்பாய்த் தேடலுங் காண்கி லாதான், பின்றனக் கேவலோர்பால் வினவின ளதற்கங் கன்றோ, ரின்றிர விருளின்முற்றத் தென்பவ னுடனே கூடிப், பொன்றிகழ் மாதெங் கேயோ போயின ளறியோ மென்றார். (௪௮)

அம்மொழி கேட்டுவாடி யணங்குமன் பாலிலோடிச், செம்மையி னுரைக்கத் தானுந் தேவியுங் கன்றைவிட்டு, விம்முமான் கலையும்போலாய் விழுந்தழு தொருஷிாஅத்துத், தம்முளத் துணர்வு நீங்கித் தடியெனக் கிடந்திட் டாரால். (௪௯)

